# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் ஆன்மிக அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 3 (2017 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 8)

## விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல்)

1. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? **73**
2. ஆண்டவராகிய கடவுள் ஆதாம், ஏவாளை எங்கே குடியிருக்கச் செய்தார்? **ஏதேன் தோட்டத்தில்**
3. மோசே எந்த ஆற்றிலிருந்து பார்வோனின் மகளால் கண்டெடுக்கப்பட்டார்? **நைல்**
4. கடவுள் இஸ்ராயேலரை எகிப்திலிருந்து விடுவிக்கு முன் எத்தனை பெரும் துன்பங்களை எகிர்தியருக்கு அளித்தார்?**10**
5. கடவுள் 10 கட்டளைகளை மேசேக்கு வழங்கிய மலை எது? **சீனாய் மலை**
6. பெலிஸ்தியருடன் போரிட்டு, 40 ஆண்டுகள் பெலிஸ்தியரின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ராயேலரை விடுவித்தவர் யார்? **சிம்சோன்**
7. சாமுவேலின் பெற்றோர் பெயர் என்ன? **எல்கானா, ஆன்னா**
8. சிறுவன் சாமுவேலை கடவுள் எத்தனை முறை அழைத்தார்? **4**
9. நினிவே நகருக்கு கடவுளால் அனுப்பப்பட்ட இறைவாக்கினர் யார்? **யோனா**
10. யோனா எத்தனை நாள் மீனின் வயிற்றுள் இருந்தார்? **3**
11. திருமுழுக்கு யோவானின் பெற்றோர் யார்? **செக்கரியா, எலுசபேத்**
12. மரியாளுக்கு இயேசுவின் பிறப்பை அறிவித்த வானதூதரின் பெயர் என்ன? **கபிரியேல்**
13. இயேசு எங்கே பிறந்தார்? **பெத்லேகேம்**
14. இயேசுவின் வளர்ப்புத்தந்தையின் பெயர் என்ன? **புனித யோசேப்பு**
15. புனித சூசையப்பரின் தொழில் என்ன? **தச்சுத் தொழில்**
16. திருச்சபையின் கட்டளைகள் எத்தனை? **6**
17. அருளடையாளங்கள் எத்தனை? **7**
18. அழியாத முத்திரை வழங்கும் அருளடையாளங்கள் எவை? **திருமுழுக்கு, உறுதிபூசுதல், குருத்துவம்**
19. சுங்கச் சாவடியில் இருந்து இயேசு அழைத்த திருத்தூதர் யார்? **மத்தேயு**
20. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
21. இயேசுவின் திருமுழுக்கின் போது தூய ஆவியார் எவ்வடிவில் வானில் தோன்றினார்? **புறா வடிவில்**
22. உயிர்த்த இயேசுவை இறுதியாக கண்ட திருத்தூதர் யார்? **தோமா**
23. சிலுவை அடையாளம் யாரின் பெயரால் வரையப்படுகின்றது? **தந்தை, மகன், தூய ஆவி**
24. இயேசுவைக் கைது செய்ய வந்த படைவீரனின் காதை வெட்டியவர் யார்? **புனிதர் பேதுரு**
25. புனித பேதுருவின் சகோதரர் பெயர் என்ன? **புனித அந்திரேயா**
26. இயேசுவோடு எத்தனை கள்வர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள்? **2**
27. இயேசு சிலுவை சுமந்த போது அவருக்கு சிலுவை சுமக்க உதவியர் யார்? **சீரேன் ஊர் சீமோன்**
28. இறுதி இராவுணவின் போது இயேசுவின் மார்புப்பக்கமாக சாய்ந்திருந்த அன்புச் சீடர் யார்? **புனித யோவான்**
29. இறுதி இராவுணவின் போது இயேசுவிடமிருந்து அப்பத்துண்டைப் பெற்ற பின் வெளியேறிச்சென்ற சீடர் யார்? **யூதாஸ் ஸ்கரியோத்து**
30. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பதினான்காம் லியோ**

**பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுத கற்றுக் கொள்ளுங்கள்**

“பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே” லூக்கா 1: 42

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

எல்லாம் வல்ல இறைவனிடமும் சகோதர சகோதரிகளே உங்களிடமும் நான் பாவியென்று ஏற்றுக்கொள்கின்றேன். ஏனெனில் என் சிந்தனையாலும், சொல்லாலும் கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன். என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே,
ஆகையால் எப்பொழுதும் கன்னியான புனித மரியாவையும், வானதூதர், புனிதர் அனைவரையும், சகோதரர் சகோதரிகள் உங்களையும் நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகின்றேன்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

என்னோடு இயேசுவே கொஞ்ச நேரம் பேசுமே ஆசையாய் இருக்குதையா 2-
உன் அருகில் நான் அமர்ந்து என் கதைய சொல்ல வேணும் – 2
எப்போதும் நான் இருக்கேன் என்று சொல்ல நீ வேணும் – 2
நான் திரும்புற திசையெல்லாம் உன் உருவம் தெரிய வேணும் – 2
திரும்பாத சொந்தமாக நீ மட்டும் எனக்கு வேணும் – 2
உன் கையப் புடிச்சு நானும் காலாற நடக்க வேணும் – 2
கலங்குற என் கண்ண உன் கரமே தொடைக்க வேணும் – 2